பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

31 12 2024 **TUESDAY** **7.15 AM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிஎஸ்எல்வி-சி - 60 ராக்கெட் மூலம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்ட செயற்கைக்கோள்களை ஒருங்கிணைக்கும் பணி ஒரு வாரத்தில் நடைபெறும் என இஸ்ரோ தெரிவித்துள்ளது.

2. போதைப் பொருள் தடுப்பு மற்றும் நக்ஸலைட் தீவிரவாத ஒழிப்பில் மத்திய அரசு உறுதியுடன் செயல்பட்டு வருவதாக உள்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

3. நாட்டின் பொருளாதாரம் வரும் ஆண்டில் மேலும் வளர்ச்சி அடையும் என ரிசர்வ் வங்கி கவர்னர் திரு சஞ்சய் மல்ஹோத்ரா கூறியுள்ளார்.

4. வடமாநிலங்களில் கடும் பனி மூட்டம் தொடர்ந்து நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. உலக **Blitz** செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் வைஷாலி நாக்அவுட் சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

*<u>--- இனி விரிவான செய்திகள் ----</u>*

**<<<<>>>>>**

பிஎஸ்எல்வி சி - 60 ராக்கெட் மூலம் இரண்டு செயற்கைக் கோள்கள் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டன.

ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து நேற்றிரவு **Spadex** இரட்டை செயற்கைக்கோள்களுடன் இந்த ராக்கெட் செலுத்தப்பட்டது.

*<u>(சவுண்ட் - ராக்கெட் - 21 செகண்ட்ஸ்)</u>*

இந்தியாவின் விண்வெளி ஆய்வு மையத்திற்கு உபகரணங்கள் மற்றும் பொருட்களை கொண்டு செல்வதற்கான தொழில்நுட்பத்தை சோதிக்கும் வகையில் இந்த செயற்கைக்கோள்கள் விண்ணில் செலுத்தப்பட்டுள்ளன.

விண்ணில் செலுத்தப்பட்ட 15 நிமிடங்களில் இது 476 கிலோமீட்டர் உயர சுற்றுவட்டப்பாதையில் நிலை நிறுத்தப்பட்டதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

**<<<<>>>>>**

பிஎஸ்எல்வி-சி - 60 ராக்கெட் மூலம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்ட செயற்கைக்கோள்களை ஒருங்கிணைக்கும் பணி ஒரு வாரத்தில் நடைபெறும் என இஸ்ரோ தெரிவித்துள்ளது.

இந்த செயற்கைக்கோள்கள் நேற்றிரவு ஸ்ரீஹரிகோட்டாவில் வெற்றிகரமாக செலுத்தப்பட்டதையடுத்து பேசிய இஸ்ரோ தலைவர் திரு சோம்நாத், செயற்கைக்கோள்கள் துல்லியமாக நிலைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இரு செயற்கைக்கோள்களின் தொலைவும் படிப்படியாக அதிகரிக்கப்பட்டு பின்னர் அருகருகே கொண்டுவரப்பட்டு ஒருங்கிணைக்கும் பணிகள் நடைபெறும் என்று அவர் கூறினார்.

வரும் 7-ஆம் தேதி இவை ஒருங்கிணைக்கப்படும் என்ற எதிர்பார்க்கப்படுவதாக திரு சோம்நாத் தெரிவித்தார்.

<<<<>>>>

போதைப் பொருள் தடுப்பு மற்றும் நக்ஸலைட் தீவிரவாத ஒழிப்பில் மத்திய அரசு உறுதியுடன் செயல்பட்டு வருவதாக உள்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

2024-ஆம் ஆண்டின் செயல்பாடுகள் குறித்து அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆழ்கடல் பகுதியில் இருந்து இந்தாண்டு மொத்தம் 4 ஆயிரத்து 134 கிலோ போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு லட்சத்து 17 ஆயிரம் கிலோ போதைப்பொருட்கள் அழிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

மாநில அரசுகளின் ஒத்துழைப்புடன், அனைத்து மாநிலங்களிலும் தேசிய போதைப்பொருள் தடுப்பு அமைப்பின் அலுவலகங்கள் அமைக்கப்படும் என்றும், அதற்கான பணிகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் இடதுசாரி தீவிரவாதம் பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல்வேறு மாநிலங்களில் தொள்ளாயிரத்து 92 நக்சலைட்டுகள் கைது செய்யப்பட்டதாகவும், 287 நக்சலைட்டுகள் கொல்லப்பட்டதாகவும் அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் எண்ணிக்கை இந்தாண்டு 100-க்கு கீழ் குறைந்துள்ளதாகவும், இது கடந்த 40 ஆண்டுகளில் இதுவே முதல் முறை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் மேம்பாட்டுக்காக மூவாயிரத்து ஆறு கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாகவும் உள்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

நாட்டின் பொருளாதாரம் வரும் ஆண்டில் மேலும் வளர்ச்சி அடையும் என ரிசர்வ் வங்கி கவர்னர் திரு சஞ்சய் மல்ஹோத்ரா கூறியுள்ளார்.

நிதி ஸ்திரத்தன்மை தொடர்பாக நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

உலக அளவில் நிச்சயமற்ற சூழல் நிலவினாலும், நடப்பு நிதியாண்டின் பிற்பகுதியில் இந்திய பொருளாதாரத்தின் வளர்ச்சி மேலும் அதிகரிக்கும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

வாடிக்கையாளர்களை மையமாக கொண்ட, தொழில்நுட்ப ரீதியான மேம்படுத்தப்பட்ட நவீன நிதி அமைப்பை உருவாக்க ரிசர்வ் வங்கி நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார நடவடிக்கைகளுக்கு மேலும் ஆதரவு அளிக்கும் வகையில் நிதிக்கொள்கைகள் அமைந்துள்ளதாகவும், இது வளர்ச்சியை எளிதாக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் 37 வணிக வங்கிகளின் வாராக்கடன் கடந்த செப்டம்பர் மாதத்தில இரண்டு புள்ளி ஆறு சதவீதமாக குறைந்துள்ளது என்றும் ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள நிதி ஸ்திரதன்மை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

நாட்டில் பொதுமக்கள் குறைதீர்ப்பு செயல்முறைகளில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக மத்திய பணியாளர் நலன் மற்றும் பொதுமக்கள் குறைதீர்ப்புத்துறை இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

இந்தாண்டு பொதுமக்கள் குறைதீர்ப்பு நடைமுறைகள் தொடர்பான ஆண்டு இறுதி ஆய்வுக்கூட்டம் புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

இதில் பங்கேற்று பேசிய அமைச்சர், மையப்படுத்தப்பட்ட பொதுமக்கள் குறைதீர்ப்பு நடைமுறையில் இந்த ஆண்டு 28 லட்சம் பேர் பதிவு செய்துள்ளதாக கூறினார்.

செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட தொழில்நுட்பங்களின் உதவியுடன் குறைதீர்ப்பு நடைமுறைகளை மேம்படுத்த மேலும் 270 கோடி ரூபாய் நிதியை மத்திய அரசு ஒதுக்கியிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

தற்போது குறைதீர்ப்புக்கான சராசரி கால அளவு 12 நாட்களாக குறைந்துள்ளது என்று அவர் தெரிவித்தா்.

வரும் ஆண்டில் இந்த நடைமுறைகள் மேலும் திறம்பட்ட வகையில் மேம்படுத்தப்படும் என்றும் திரு ஜிதேந்திர சிங் கூறினார்.

இக்கூட்டத்தில் மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்கள், பல்வேறு மாநிலங்களின் அரசுத்துறைகள் உள்ளிட்டவற்றை சேர்ந்த 500-க்கும் மேற்பட்ட மூத்த அதிகாரிகள் பங்கேற்றனர்.

<<<<>>>>

மறைந்த முன்னாள் பிரதமர் வாஜ்பாயின் நூற்றாண்டு விழாவை குறிக்கும் வகையில், ராஜஸ்தானில் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் அடல் கல்வி மையங்கள் அமைக்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு பஜன்லால் சர்மா கூறியுள்ளார்.

ஜெய்பூரில் நேற்று நடைபெற்ற வளர்ச்சித் திட்டங்கள் தொடர்பான ஆய்வுக்கூட்டத்தில் பேசிய அவர், இந்த மையங்களில் நூலகங்கள் உள்ளிட்ட அறிவுசார் அம்சங்கள் இடம்பெறும் என்று தெரிவித்தார்.

<<<<>>>>

வடமாநிலங்களில் கடும் பனி மூட்டம் தொடர்ந்து நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஜம்மு-காஷ்மீர், ஹிமாச்சலப் பிரதேசம், லடாக் உள்ளிட்ட பகுதிகளில் கடும் குளிர் நிலவும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்கு உத்தரப்பிரதேசம், ஹரியானா, சண்டிகர் ஆகிய பகுதிகளிலும் பனி மூட்டம் நீடிக்கும் என அந்த மையம் கூறியுள்ளது.

ஒடிசா, அசாம், மேகாலயா, நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம், திரிபுரா ஆகிய மாநிலங்களின் பல பகுதிகளில் இரவு மற்றும் காலை நேரங்களில் மூடுபனி நிலவும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த 2 முதல் 3 நாட்களில் நாட்டின் மத்திய மற்றும் கிழக்குப் பகுதிகளில் குறைந்தபட்ச வெப்பநிலை இரண்டு முதல் மூன்று டிகிரி செல்சியஸ் வரை குறையக் கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

இதுதவிர, அடுத்த ஐந்து நாட்களுக்கு நாட்டின் மேற்குப் பகுதிகளில் குறைந்தபட்ச வெப்பநிலை நான்கு டிகிரி செல்சியஸ் வரை குறையக் கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், கடும் பனி காரணமாக வடமாநிலங்களில் பல்வேறு ரயில்கள் தாமதமாக இயக்கப்படுவதாக ரயில்வே தெரிவித்துள்ளது.

<<<<>>>>

பிரயாக்ராஜில் நடைபெறவுள்ள கும்பமேளா விழாவையொட்டி, சென்னையிலிருந்து சிறப்பு ரயில்கள் இயக்கப்பட உள்ளதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

சென்னை சென்ட்ரலில் இருந்து கோம்தி நகருக்கு ஜனவரி 18, பிப்ரவரி 5, மார்ச் ஒன்று ஆகிய தேதிகளில் ரயில்கள் இயக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் மறைவு மற்றும் ஒடிசாவில் பயிர் சேதங்கள் ஆகியவற்றால் ஆங்கிலப் புத்தாண்டு கொண்டாட்டங்களில் பங்கேற்கப் போவதில்லை என ஒடிசா முதலமைச்சர் திரு மோகன் சரண் மாஜி கூறியுள்ளார்.

புத்தாண்டில் தமக்குப் பரிசுப் பொருட்களை வழங்க வேண்டாம் என்றும் ஆதரவாளர்களிடம் அவர் கேட்டுக் கொண்டுள்ளதாக ஒடிசா முதலமைச்சர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், இந்தியா – நேபாளம் இடையே கூட்டு ராணுவப்பயிற்சி, நேபாளத்தின் சல்ஜண்டியில் இன்று தொடங்குகிறது.

சூரியகிரண் என்ற இந்த பயிற்சியில் பேரிடர் மேலாண்மை ஒத்துழைப்பு, தீவிரவாத எதிர்ப்பு உள்ளிட்டவற்றில் கவனம் செலுத்தப்படும்.

இதில், இந்தியா சார்பில் 4 ஆயிரத்து 442 வீரர்களும், நேபாளத்திலிருந்து 4 ஆயிரத்து 715 வீரர்களும் பங்கேற்கின்றனர்.

ஜனவரி 13-ஆம் தேதி வரை இந்த கூட்டு ராணுவ பயிற்சி நடைபெறவுள்ளது.

<<<<>>>>

ஜம்மு காஷ்மீரின் பாதுகாப்பு சூழல் குறித்து ஸ்ரீநகரில் மத்திய உள்துறை செயலாளர் திரு கோவிந்த் மோகன் நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

பாதுகாப்பு தயார் நிலை, பயங்கரவாத எதிர்ப்பு உள்ளிட்வை தொடர்பாக இந்த ஆய்வுக்கூட்டத்தில் ஆலோசனை றேம்கொள்ளப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

குல்மார்க், பஹல்ஹாம் உள்ளிட்ட இடங்களில் குளிர்கால சுற்றுலா தொடர்பான நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வது குறித்தும் அவர் ஆலோசனை நடத்தினார்.

<<<<>>>>

தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவராக ஓய்வுபெற்ற நீதிபதி திரு ராமசுப்பிரமணியன் நேற்று பொறுப்பேற்றுக்கொண்டார்.

பின்னர் பேசிய அவர், மனித உரிமைகளை பாதுகாக்க அனைத்துத்தரப்பினரின் ஒருங்கிணைந்த முயற்சிகள் அவசியம் என்று கூறினார்.

<<<<>>>>

வானிலை ஆய்வில் இந்த ஆண்டில் குறிப்பிடத்தக்க சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளதாக மத்திய புவி அறிவியல் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இரண்டாயிரம் கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் வானிலை இயக்கம் நாட்டில் வானிலை ஆய்வையும், முன்னறிவிப்பு சேவைகளையும் மேலும் வலுப்படுத்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்வி விஞ்ஞான் திட்டம் வானிலை தொடர்பான கல்வி மற்றும் ஆய்வுப்பணிகளை மேம்படுத்தும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலக **Blitz** செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் வைஷாலி நாக்அவுட் சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

நியூயார்க்கில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் தாம் பங்கேற்ற பத்து ஆட்டங்களில் எட்டில் வெற்றிபெற்று, அவர் நாக்அவுட் சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

------------

சந்தோஷ் கோப்பை கால்பந்துப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் கேரளா இன்று மேற்கு வங்க அணியை எதிர்கொள்கிறது

ஹைதராபாதில் இரவு 7.30-க்கு இப்போட்டி தொடங்குகிறது.

----

ஐஎஸ்எல் கால்பந்து போட்டியில் நேற்றைய ஆட்டத்தில், ஒருங்கிணைந்த வடகிழக்கு அணி, மும்பை அணியை வென்றது.

மும்பையில் நடைபெற்ற இப்போட்டியில், ஒருங்கிணைந்த வடகிழக்கு அணி, 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

**<<<<END>>>>**